அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 02/2015

எனது இல:EST-3/UNION/06/0019
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2015.05.19

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,

**ஆலோசனைக் குழுக்கள் மற்றும் நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களினை அமைத்தல்**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2000.03.30 ஆம் திகதிய 10/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012.07.24 ஆம் திகதிய 05/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் என்பவற்றின்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கை மற்றும் சுற்றறிக்கைக் கடிதத்தில் விதித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய தங்களின் அமைச்சு, அமைச்சுக்குரிய திணைக்களங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் மற்றும் நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் தற்போது தொழிற்பட்டு வருகின்றன என நான் நம்புகின்றேன்.

03. 10/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் முதலாவது பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் மற்றும் 2006.01.10 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய அமைக்கப்பட்ட நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் என்பவற்றின் தொழிற்பாட்டில் ஏதேனும் வீழ்ச்சி காணப்படின் அத்தகைய நிலமையினைத் தவிர்த்து உரிய ஆலோசனைக் குழுக்கள் மற்றும் நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் என்பவற்றின் முறையான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு உடனடியாக அமுலுக்கு வரும் வண்ணம் நடவடிக்கையினை எடுக்கும்படி தங்களுக்கு இத்தால் நான் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக
ஆட்சி அமைச்சு